# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.124/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருநாவுக்கரசு | Father's Name | : | பெரியசாமி |
| Village | : | கலவை | Taluk | : | ஆற்காடு |
| Calling | : | | Age | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(Accused absent. For petition U/s. 355 BNSS is filed and allowed).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.1, Dated 09.03.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் ராணிபேட்டை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1516, நாள் 09.03.2026 ன்படி திரு திருநாவுக்கரசு அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:07 +0530

ராணிபேட்டை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு K.யுவராஜ் (Assistant) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராணிப்பேட்டை மாவட்டம், கலவை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், தலைமை காவலர் 1263 ஞானசேகரன் ஆகியோருடன் காவல் சரகங்களில் கடந்த 15.02.2025 அன்று காலை ரோந்து சென்று கொண்டிருந்தபோது திருவாரூர் தெற்கு வீதியில் உள்ள அப்பல்லோ மெடிக்கல் எதிரே ஒரு நபர் கையில் பெரிய வீச்சருவாளை வைத்துக்கொண்டு சாலையில் சென்று வரும் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக நடுரோட்டில் நின்று சத்தம் போட்டுக் கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்றபோது அருவாளை சுழற்றியபடி நான்தான் பெரிய ரவுடி எனக்கு எல்லாரும் மாமுல் கொடுக்க வேண்டுமென சத்தம் போட்டுக் கொண்டு நடுரோட்டில் நின்றவர் போலீஸ் வாகனத்தை கண்டதும் ஓட முயற்சித்தவரை வளைத்துப் பிடித்தோம். மேற்படி நபர் ஏற்கனவே நகர காவல் நிலைய கொலை வழக்கில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:12 +0530

சம்மந்தப்பட்ட இலவங்கார்குடி மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் சாமிநாதன் மகன் மணிகண்டன் என தெரியவந்தது. பின்னர் வீச்சருவாளை கையில் வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு இடையூறாக நடுரோட்டில் சாலையில் சென்றவர்களை மிரட்டி கொண்டிருந்தவரை அதே இடத்தில் காலை 9.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து 9.30 மணிக்கு சாட்சிகள் கேசவன், சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் எதிரியிடமிருந்து சா.பொ.1 யை அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் 10.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது திருவாரூர் நகர காவல் நிலைய கு.எண் 68/2025, பிரிவு 25(1-A) Arms Act ன்படி முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். எதிரியை திரேக சோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்புவித்தேன். அந்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3**. காலை 11.00 மணிக்கு மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**. சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.5**. 15.02.2025 அன்று சாட்சிகள் கேசவன், சிலம்பரசன், சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், தலைமை காவலர் ஞானசேகரகன்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:43:18 +0530

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 13.03.2025 அன்று எதிரி மீது பிரிவு 25(1-A) Arms Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால் சரி. சம்பவ இடத்திலிருந்து பொதுமக்களோ அந்த இடத்தில் கடை நடத்தி வந்த கடை உரிமைதாரர்களோ புகார் கொடுக்கவில்லை என்றால் தகவல் வந்தது. தகவலை யார் கொடுத்தார்கள், தொலைபேசி மூலமாக எழுத்து மூலமாகவா என்றால் தொலைபேசி மூலம் தகவல் வரப்பெற்றது. அந்த தொலைபேசி எண் என்ன, தொலைபேசிக்குரிய நபர் யாரென்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. தெற்கு வீதியில் இருந்த அப்பல்லோ மெடிக்கல் வாசலில் உள்ள CCTV Camera வை கைப்பற்றி ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை எனவும் எந்த சாட்சிகள் முன்னிலையிலும் எதிரியிடமிருந்து சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை எனவும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட சான்று பொருள் எனவும் ஆவணங்கள் அனைத்தும் காவல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:24 +0530

நிலையத்தில் வைத்து பின்னிட்டு ஜோடிக்கப்பட்டவை எனவும் சொன்னால் தவறு. எதிரி மீது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் ஏற்கனவே ஒரு கொலை வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால் எதிரி மீது குண்டர் தடுப்பு சட்டத்தின்கீழ் கைது செய்ய வேண்டுமானால் எதிரி மீது மேலும் சில வழக்குகள் போட வேண்டும் என்பதற்காக நடக்காத சம்பவத்திற்காக நானே புகார் அளித்து அவர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கைக்கு ஆதரவாக குற்ற பத்திரிகை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.